DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE, OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.

SESSIONS CASE NO.574/2018

DEPOSITION OF WITNESS 10 FOR PROSECUTION..

Name : பாலுச்சாமி

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 14.8.2019.

மு.வி.

நான் தற்போது சாப்டுர் காவல்நிலையம், கூடுதல் பொறுப்பு சேடபட்டி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிசெய்து வருகிறேன். கடந்த 1.4.2018ம் தேதி எழுமலை காவல்நிலையத்தில் பொறுப்பு சார்புஆய்வாளராக பணியில் இருந்தபோது அ.சா.1 இளையராஜா நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று அக்காவல்நிலையகுற்ற எண்.92/2018, சட்டப்பிரிவு 302 இ.த.சவாக வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவுசெய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.12. அதன்பின்னர் காவலர் 2080 தேவராஜ் என்பவர்மூலம் விரைவு தபாலை கொடுத்து, 8.30 மணிக்கு வட்ட காவல் ஆய்வாளர் திரு சிவக்குமார் அவரிடம் புலன்விசாரணைக்காக வழக்கு கோப்பை ஒப்படைத்தேன். வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

கு.வி.

இந்த வழக்கில் அ.சா.1 எழுத்துமூலமான புகார் கொடுத்தார் என்றால் சரி. மேற்படி புகாரில் அ.சா.2 அவரது மனைவி ஜெயா சாட்சி கையொப்பம் செய்திருக்கிறார் என்றால் சரியல்ல. புகாரிலோ, முதல் தகவல் அறிக்கையிலோ, அ.சா1 சம்பவத்தைநேரில் பார்த்தாக கூறவில்லை என்றால் சரி. முதல் தகவல் அறிக்கையும் புகாரிலும் சந்தேக மரணம் என அ.சா.1 குறிப்பிட்டுள்ளாரா என்றால் குறிப்பிடவில்லை. முதல் தகவல் அறிக்கையில் காலம் 15ல் முதல் தகவல்அறிக்கை அனுப்பப்பட்ட நாள்நேரம் என்றுள்ளதில் நாள் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் நேரம்குறிப்பிடப்படவில்லை என்று

சொன்னால் சரி. முதல் தகவல்அறிக்கை காலம் 14ல் கையொப்பம்அல்லது பெருவிரல் ரேகை என்றுள்ளதில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரி. நான் சொன்ன போல் அ.சா.1 புகார் கொடுக்கவில்லை என்றாலும் அதன்பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. புகாரில், அ.சா.1 சம்பவத்தன்று தன் மாமனாரை தேடி தேடி பார்த்தோம் கிடைக்கவில்லை என கூறியுள்ளாரா என்றால் கூறியுள்ளார். நான் சொன்ன தேதியில் சொன்ன வகையில் புகார் கொடுக்கவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. அந்த பகுதியில் உள்ள கிராம நிர்வாகஅலுவலர் கொடுத்த தகவலின் அடிப்படையில்வழக்கு பதிவு செய்யப்பட்டு அது மறைக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. காவலர் மூலம் உயர் அதிகாரிகிளுக்கு அனுப்பி வைத்த ஆவணங்களை, ஆய்வாளர் என்னை விசாரித்தபோது கொடுத்தீர்களா என்றால் கொடுக்கவில்லை. ஆய்வாளர் விரைவு தபால் அனுப்பி விட்டீர்களா என விசாரணையின்போது கேட்டார். நான் 2017-2019 வரை மேற்படி காவல்நிலையத்தில் பணி செய்தேன். மேற்படி காவல்நிலையத்திஙல அ.சா.1,. 2-க்கு எதிராக 3.11.2018ம் தேதி எதிரி ஒரு புகார் கொடுக்கப்பட்டு அதன்அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ள விவரம் தெரியும். அதில் அ.சா1,2 இருவரும் எதிரியை கடுமையான ஆயுதங்களால் தாக்கியதாக புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியும் என்றால் புகார் கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது தெரியும். அதில் உள்ள சரத்து தெரியாது.

ம.வி.இல்லை.